மின்னிதழ்
# தேசியம்
THESIYAM
www.thesiyamnews.com

ARUN WINGS TRAVELS & TOURS
Smart Fly
கடவுச் சீட்டு / வீசா சேவை / ETA வீசா / பயணக் காப்பீடு
விடுமுறை பயணத்தொகுப்பு / பயணத்திட்டம்
ARUN WINGS TRAVELS & TOURS (Pvt) Ltd
143, Temple Road, Jaffna. Tel: 076 8472458, 076 6668680
arunwingslanka@gmail.com

மலர்: 02 | குரல்: 144 | வள்ளுவர் ஆண்டு 2054 | புதன்கிழமை 31.01.2024 | பக்கங்கள் 10

## சுமந்திரன் விரைவாக வெளியேறலாம்! ஆதங்கப்படும் தொண்டன்!



பக்கம்-05

## சம்பந்தன் தலைவராக இருந்த போது கசப்பான அனுபவங்களை எதிர்கொண்டோம்! சித்தார்த்தன் தெரிவிப்பு!



பக்கம்-05

# யாழில் பறிபோகவுள்ள தமிழர் நிலம்! அரசின் இரகசிய திட்டம் அம்பலம்!




பக்கம்-02

## இனவாதம் ஒழிக்கப்பட வேண்டும்! மனோ கணேசன் தெரிவிப்பு!



பக்கம்-08

## இலங்கையில் மகாத்மா காந்தியின் 76 ஆவது சிரார்த்த தினம் அனுஷ்டிப்பு!



பக்கம்-07

தேசியம் பத்திரிகையின் மின்னிதழைப் பெற இவ் வாட்ஸ் ஆஃப் குழுவில் இணைந்து கொள்ளுங்கள்.
Whatsapp +94 76 567 3339
No. 27, Kannathiddy Road, Jaffna.Tel : 021 222 7557
SCAN ME

# யாழில் பறிபோகவுள்ள தமிழர் நிலம்! அரசின் இரகசிய திட்டம் அம்பலம்!



யாழ்ப்பாணம் வலிகாமம் வடக்கில் மக்களிடம் மீளக்கையளிக்கப்பட்ட நிலங்களில் இருந்து 500 ஏக்கரை மீண்டும் சுவீகரிக்க இரகசிய முயற்சி இடம்பெறுவது அம்பலமாகியுள்ளது.

யாழ். சர்வதேச விமான நிலைய அபிவிருத்தி என்னும் பெயரில் மேலதிக தேவைகளுக்காக தற்போது படையினரிடம் உள்ள நிலங்களுடன் 500 ஏக்கரை சுவீகரித்துத் தருமாறு விமான போக்குவரத்து அதிகார சபை விடுத்த கோரிக் கைக்கமைய இன்று நில அளவைத் திணைக்கள அதிகாரிகள் அப்பகுதிக்கு வருகை தந்து பார்வை யிட்டுச் சென்றனர்.

இதற்கமைய ஏற்கனவே மக்களிடம் கையளிக்கப் பட்ட குரும்பசிட்டி, வசாவிளான், கட்டுவன், கட்டுவன் மேற்கு, குப்பிளான் வடக்கு ஆகிய கிராமங்களை உள்ளடக்கிய வகையிலேயே இந்த 500 ஏக்கரை சுவீகரிக்க இரகசிய முயற்சி இடம் பெற்று வருகின்றது.

விமானப் போக்குவரத்து அதிகார சபை ஊடாக நில அளவைத் திணைக்களத்திடம் சமர்ப்பித்த வரைபடம் சகிதம் சுவீகரிக்க முயற்சிக்கும் பகுதிகளின் கிராமசேவகர்களும் இதன்போது அப்பகுதிகளை நேரில் வந்து பார்வையிட்டுச் சென்றதனால் அப் பகுதி மக்கள் பெரும் குழப்பம டைந்துள்ளனர்.

வலி. வடக்கில் ஏற்கனவே படையினரிடம் மூவா யிரம் ஏக்கர் நிலம் உள்ளது. இதனை விடுவிக்கு மாறு பலகோரிக்கைகள் முன்வைத்தபோதும் மௌனம் காக்கும் அரசு தற்போது இந்த இரகசிய முயற்சியில் ஈடுபடுகின்றமை அம்பலமாகியுள்ளது. வலி.வடக்கு தெல்லிப்பழை பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழு கூட்டம் கடற்றொழில் அமைச் சரும் யாழ்-கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்பு குழுவின் தலைவருமான டக்ளஸ் தேவானந்தா வின் தலைமையில் இன்று செவ்வாய்க்கிழமை தெல்லிப்பளை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத் தில் நடைபெற்றது.

இதன்போது காணி விடுவிப்பு மற்றும் விடுவிக்கப் பட்ட காணிகளை மீள சுவீகரிக்க மேற்கொள்





ளப்படும் நடவடிக்கை தொடர்பில் ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவரிடம் கேள்வியெழுப்பப்பட்டது. இதன்போது விடுவிக்கப்பட்ட காணிகளை மீள சுவீகரிக்க எடுக்கப்படும் முயற்சிகள் தொடர்பாக தனக்கு எதுவும் தெரியாது என்றும் தான் இது தொடர்பில் ஆராய்வதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை விடுவிக்கப்பட்ட காணிகளை மீள சுவீகரிக்கும் நடவடிக்கையை அரசாங்கம் கைவிட வேண்டும் என தெரிவித்த வலி.வடக்கு பிரதேச சபை முன்னாள் தவிசாளர் சோ.சுகிர்தன், அல்லாவிடின் அதற்கு எதிராக தொடர் போராட்டங்கள் மேற்கொள் ளப்படும் என்றார்.

விடுவிக்கப்பட்ட காணிகளில் மக்கள் நிம்மதியாக வாழும் சூழலில் இவ்வாறு மீளவும் காணிகளை சுவீகரிக்க முயற்சிப்பதை ஏற்கமுடியாது என்றார்.

## அன்பான வாசகர்களுக்கு..!

தேசியம் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைகு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம். பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.


அனுப்ப வேண்டிய முகவரி :

E-mail : thesiyamnews@gmail.com | Whatsapp : +94 76 567 3339

# சாந்தன் இலங்கை திரும்புவது!

# சிறீலங்கா பாதுகாப்பு அமைச்சின் கைகளில்!





சிறீலங்கா பாதுகாப்பு அமைச்சின் அனுமதி கிடைத்தால் சாந்தனை இலங்கைக்கு அனுப்ப உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என இந்திய தூதரக அதிகாரி தன்னிடம் தெரிவித்ததாக நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார்.

இது தொடர்பில் சிறீதரன் எம்.பி. மேலும் தெரிவிக்கையில், ராஜீவ் காந்தி கொலை வழக்கில் விடுதலை செய்யப்பட்டு இந்தியாவிலுள்ள சிறப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள சாந்தனை இலங்கைக்கு அழைத்து வரும் விடயம் தொடர்பில் இன்றைய தினம் வெளி விவகார அமைச்சர் அலி சப்ரியுடன் பேசினேன்.

சாந்தனை இலங்கை திரும்பி வருவதற்கு வெளிவிவகார அமைச்சினால் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கின்றோம். சென்னையில் உள்ள தூதரகத்தின் துணைத் தூதரான வெங்கட் அவர்களோடு பேசப்பட்டுள்ளது. அநேகமாக இரண்டு மூன்று நாட்களுக்குள் அந்த விடயம் சரிவரும். அத்தோடு இந்திய அதிகாரிகளால் சில ஆவணங்கள் கேட்கப்பட்டுள்ளன. அந்த ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படுமிடத்தில் அந்த விடயம் சாத்தியமாகும் என தெரிவித்தார்.

மேலும் சென்னையில் உள்ள தூதரகத்தின் துணைத்தூதுவருடனும் நான் தொலைபேசியில் பேசினேன். பாதுகாப்பு அமைச்சினுடைய சில உறுதிப்படுத்தலுக்காக காத்திருப்பதாகவும் உறுதிப்படுத்தல் கிடைத்தவுடன் சாந்தனை இலங்கைக்கு அனுப்புவதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

இந்திய தூதரகத்தால் ஆவணங்கள் இலங்கை அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் சிறீலங்கா பாதுகாப்பு அமைச்சின் உரிய அனுமதி கிடைத்தவுடன் இலங்கைக்கு அனுப்புவதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும் என இந்திய அதிகாரி தெரிவித்ததார் - என்றார்.

## கொக்கட்டிச்சோலை தமிழர் படுகொலை நினைவேந்தல்! தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைமை காரியாலயத்தில் யாழ்மாவட்ட அமைப்பாளர் பொன்மாஸ்டர் தலைமையில் இடம் பெற்றது!













# யாழில் இடம் பெற்ற மாவட்ட பண்பாட்டு விழா!

வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம், யாழ். மாவட்ட பண்பாட்டுப் பேரவை மற்றும் யாழ். மாவட்ட செயலகத்தின் இணைந்த ஏற்பாட்டில் யாழ். மாவட்டத்தில் பண்பாட்டு விழா ஒன்று இடம்பெற்றுள்ளது.

யாழ்ப்பாணம் நாச்சிமார் ஆலயத்திற்கு அருகாமையில் உள்ள சரஸ்வதி மண்டபத்தில், யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ம.பிரதீபன் தலைமையில் நேற்று (30.01.2024) இந்த விழா நடைபெற்றுள்ளது.

மேலும், குறித்த விழாவில், யாழ்ப்பாண குழல் ஓசை, சிறுவர் நடனம், கும்மியாட்டம், கோலாட்டம், காவடியாட்டம், இஸ்லாமிய நடனம், பொய்க்கால் குதிரையாட்டம் மற்றும் மயிலாட்டம் போன்ற கலை நிகழ்ச்சிகள் இடம்பெற்றுள்ளன.

அதேவேளை, இந்த நிகழ்வுக்கு பிரதம அதிதியாக வடமாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சாள்ஸ் கலந்து கொண்டதுடன் விருதுகளையும் வழங்கி வைத்துள்ளார்.

கலை பண்பாட்டில் மிகச்சிறந்த ஆற்றலை 07 வருடகாலமாக வெளிப்படுத்திய 15 பேருக்கு யாழ் முத்து விருதும், கடந்த இரண்டு வருடங்களாக கலைத்துறைக்கு அர்ப்பணிப்புடன் செயலாற்றி வந்த 12 நபர்களுக்கு இளம் கலைஞர்கள் விருதும் வழங்கிவைக்கப்பட்டுள்ளது.





# கொழும்பு பல்கலைக்கழகத்தில் உற்பத்தி செய்யப்படும் முதுமையை தடுக்கும் மருந்து!

முதமையைத் தடுக்கும் இயற்கை மருந்தின் உற்பத்தி இறுதிக்கட்டத்தில் உள்ளதாகவும், அதனை விரைவில் வழங்க முடியும் என்றும் கொழும்பு பல்கலைக்கழகத்தின் உயிர்வேதியியல், மூலக்கூறு உயிரியல் மற்றும் உயிரி தொழில்நுட்ப நிறுவனத்தின் விஞ்ஞானி பேராசிரியர் சமீர ஆர். சமரகோன் தெரிவிக்கிறார்.

இம்மருந்து இயற்கை மூலிகைகளிலிருந்து தயாரிக்கப்படுவதாகவும், முதுமையைத் தடுப்பது அல்லது எண்ணிலடங்கா வயதைக் காட்டிலும் இளமையாக தோற்றமளிப்பதே மருந்தின் செயற்பாடு என்றும் அவர் தெரிவித்திருந்தார்.

இந்த மருந்தின் உற்பத்தி மற்றும் சோதனைக்கு தனக்கும் தனது குழுவினருக்கும் நான்கு ஆண்டுகளுக்கும் மேலாக எடுத்துக் கொண்டதாகவும், தற்போது மருந்து உற்பத்தியில் தொண்ணூற்று ஒன்பது சதவீதம் நிறைவடைந்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த வகை எதிர்ப்பு மருந்துகள் உலக சந்தையில் மிகவும் பிரபலமாக உள்ளன. மேலும் சில இறக்குமதி செய்யப்பட்ட பொருட்கள் இலங்கையிலும் கிடைக்கின்றன் இருப்பினும், அவை அதிக விலைக்கு விற்கப்படுகின்றன," என்று அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த தயாரிப்பு ஒரு பாரம்பரிய சூத்திரம் என்பதால், ஆயுர்வேத திணைக்களத்திடம் அனுமதி பெறப்பட வேண்டும் என்று பேராசிரியர் சுட்டிக்காட்டினார்.





# சுமந்திரன் விரைவாக வெளியேறலாம்! ஆதங்கப்படும் தொண்டன்!



சுமந்திரன் இன்னும் நான்கு ஆண்டுகளில் தமிழரசுக் கட்சியை விட்டு விலகிச் சென்றுவிடுவார் இதனால் சட்ட நுணுக்கம் தெரிந்த இளையோருக்கு கட்சி வாய்ப்பளிக்க வேண்டும் என தமிழரசுக் கட்சியின் உறுப்பினர் அன்பின் செல்வேஸ் தெரிவித்துள்ளார்.

வயது முதிர்வு காரணமாக சம்பந்தனை ஓய்வு பெற வேண்டும் என கோரிய சுமந்திரன் இன்று குகதாசனை செயலாளர் பதவிக்கு முன்மொழிந்துள்ளமை முன்னுக்குப்பின் முரணாக உள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டி உள்ளார்.

லங்காசிறியின் ஊடறுப்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இந்த விடயத்தை கூறியுள்ளார்.

தொடர்ந்தும் அவர் தெரிவிக்கையில், குழப்பநிலை காரணமாக தமிழரசுக்கட்சியின் அங்கத்தவர் தெரிவு இடைநிறுத்தப்பட்டது 100% சரியானது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிறி நேசன் செயலாளர் போட்டியில் இருந்து விலகியமைக்கு காரணம் தற்போதைய தலைவர் சிறீதரன் பதவியை விட்டுக் கொடுக்குமாறு கேட்டுக்கொண்டமையே காரணம் என்றும் அவர் குற்றஞ்சாட்டி

# சம்பந்தன் தலைவராக இருந்த போது கசப்பான அனுபவங்களை எதிர்கொண்டோம்!




சம்பந்தன் தலைவராக இருந்த போதும் கசப்பான அனுபவங்களை எதிர்கொண்டுள்ளதாக தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக மேலும் கருத்து வெளியிட்ட அவர், "தமிழ்த் தேசிய கட்சிகள் ஒரு கூட்டமைப்பாக பதிவு செய்யப்படுவதோடு அதற்கு ஒரு பொதுவான சின்னமும் பதிவு செய்யப்பட வேண்டும்.

நான் மட்டுமில்லாது ஜனநாயக தமிழ் கட்சிகள் அனைத்துமே இந்த நிலைப்பாட்டில் தான் உள்ளது" என தெரிவித்துள்ளார்.

# சஜித்துடன் இணைந்தார் முன்னாள் இராணுவ தளபதி!

ஓய்வுபெற்ற சிறீலங்கா இராணுவ ஜெனரல் தயா ரத்நாயக்க பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியுடன் (SJB) இணைந்துள்ளார்.

எதிர்க்கட்சி தலைவரான நாடாளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாசவை சந்தித்ததன் பின்னர் ஓய்வுபெற்ற ஜெனரல், ஐக்கிய மக்கள் சக்திக்கு தனது ஆதரவை வழங்கினார்.

இந்த சந்திப்பின் போது, நாடாளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாச, ஐக்கிய மக்கள் சக்தியின் பொது கொள்கை தொடர்பான சிரேஷ்ட ஆலோசகராக தயா ரத்நாயக்கவை நியமித்தார்.

தயா ரத்நாயக்க முன்னாள் அதிபர் கோட்டாபய ராஜபக்சவின் அரசாங்கத்தின் கீழ் இலங்கை துறைமுக அதிகார சபையின் தலைவராகவும் கைத்தொழில் அமைச்சின் செயலாளராகவும் பணியாற்றினார்.



விளம்பர தொடர்புகளுக்கு
Mobile : +94 777 163990

# சஜித் தலைமையில் பாரிய ஆர்ப்பாட்டம்: தாக்குதலுக்குள்ளான முன்னாள் எம்.பி!

சிறீலங்கா அரசாங்கத்திற்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தியால் இன்று முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டத்தின் போது நீர்த்தாரை பிரயோகத்துக்கு உள்ளான கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபர் ரஹ்மான் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான ஹர்ஷ டி சில்வா இதனை உறுதிப்படுத்தியுள்ளதோடு, அவசர சிகிச்சைப் பிரிவில் முஜிபர் ரஹ்மான் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

கொழும்பு பொது நூலகத்திற்கு அருகாமையில் ஐக்கிய மக்கள் சக்தியால் முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்ட பேரணி கலைக்கப்பட்டதில் ஒருவர் காயமடைந்து கொழும்பு தேசிய வைத்தியசாலையின் விபத்து பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சிறிலங்கா அரசாங்கத்தை எதிர்த்து ஐக்கிய மக்கள் சக்தியால் முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்ட பேரணியின் மீது நீர்த்தாரை பிரயோகம்மற்றும் கண்ணீர் புகை பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச உள்ளிட்ட கட்சியின் உறுப்பினர்கள், ஆர்ப்பாட்டக்காரர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் உள்ளிட்டவர்களுக்கு எதிராக இந்த தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வரும் இந்த நீர்த்தாரை பிரயோகத்தை மீறி, ஆர்ப்பாட்டக்காரர்கள் தங்கள் ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

ஐக்கிய மக்கள் சக்தியால் இன்று முன்னெடுக்கப் பட்ட ஆர்ப்பாட்ட பேரணி காரணமாக கொழும்பு நகர மண்டபம் பகுதியில் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டுள்ளது.

அரசாங்கத்தின் நடவடிக்கைகள் மற்றும் புதிய வரிகள் அறிமுகப்படுத்தப்பட்டமைக்கு எதிர்ப்பு தெரிவித்து ஐக்கிய மக்கள் சக்தி கொழும்பு நகர மண்டபம், லிப்டன் சுற்றுவட்டாரத்தில் பாரிய ஆர்ப்பாட்ட பேரணியொன்றை முன்னெடுத்தது.

கட்சியின் தலைவர் சஜித் பிரேமதாச மற்றும் அதன் உறுப்பினர்களான முஜிபுர் ரஹ்மான், எஸ்.எம் மரிக்கார், ஹிருணிக்கா பிரேமசந்திர உள்ளிட்ட பலர் இந்த ஆர்ப்பாட்ட பேரணியில் கலந்து கொண்டிருந்தனர்.

இதன் போது, மின்சார கட்டணத்தை குறை, பெறுமதி சேர் வரியை குறை, அரசாங்கத்தை விரட்டியடிப்போம் உள்ளிட்ட பல பதாகைகளை ஏந்திய வண்ணம் ஆர்ப்பாட்டக்காரர்கள் தங்கள் ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தை முன்னிட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்படுத்தப்பட்டுள்ளதுடன், காவல்துறையினர், இராணுவத்தினர் மற்றும் கலகத்தடுப்பு பிரிவினர் பாதுகாப்பு கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

அத்துடன், நீர்த்தாரை பிரயோக வண்டிகளும் தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்தன.





# இலங்கையில் மகாத்மா காந்தியின் 76 ஆவது சிரார்த்த தினம் அனுஷ்டிப்பு!





உலகுக்கு அகிம்சையை போதித்த மகாத்மா காந்தியின் 76 ஆவது சிரார்த்த தினம் இலங்கையில் வெவ்வேறு இடங்களில் அனுஷ்டிக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வானது மட்டக்களப்பு காந்தி பூங்காவில் அமைந்துள்ள காந்தியடிகளாரின் நினைவுத் தூபியில் நேற்று (30)காலை நடைபெற்றுள்ளது.
இதன் போது மட்டக்களப்பு காந்தி சேவா சங்கத்தின் தலைவர் கலாநிதி அ.செல்வேந்திரனின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் காந்தியடிகளாரின் திருவுருவச் சிலைக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டு மலரஞ்சலியும் செலுத்தப்பட்டது.
அத்துடன் மட்டக்களப்பு காந்தி சேவா சங்கத்தின் செயலாளர் க.பாரதிதாசன் உள்ளிட்ட சமூக ஆர்வலர்கள் கலந்துகொண்டிருந்ததுடன், காந்தியடிகளாரின் திருவுருவச் சிலைக்கு மரியாதை செலுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.
மகாத்மா காந்தியின் 76 வது சிரார்த்த தின நிகழ்வுகள் யாழ்ப்பாண நகரில் இடம் பெற்றது.

யாழ் இந்திய துணை தூதரகத்தின் ஏற்பாட்டில் காந்தி சேவா நிலையத்தினரின் அனுசரணையுடன் வைத்தியசாலை வீதியில் உள்ள மகாத்மா காந்தியின் உருவச்சிலை முன்றலில் இடம்பெற்றது.

குறித்த நிகழ்வில் மகாத்மா காந்தியின் உருவச் சிலைக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டதோடு திருவுருவப்படத்திற்கு மலரஞ்சலியும் செலுத்தப் பட்டது.
இந்திய துணைத் தூதரக அதிகாரிகள் யாழ் மாநகர சபை ஆணையாளர் காந்தி சேவா நிலைய உறுப்பினர்கள் என பலரும் குறித்த நிகழ்வில் கலந்து கொண்ட நிகழ்வில் காந்தியம் காலாண்டு பத்திரிகையும் வெளியீட்டு வைக்கப்பட்டது.
பத்திரிகையை யாழ் இந்திய துணைத் தூதரக அதிகாரி வெளியிட்டு வைக்க யாழ் மாநகர சபை ஆணையாளர் பெற்றுக் கொண்டார்.

# மகிந்தவிற்கு வழங்கப்பட்ட பிரதமர் பதவி! மைத்திரிக்கு அழைப்பாணை!



கடந்த 2018ஆம் ஆண்டு, நல்லாட்சி அரசாங்கத்தின் பிரதமராக பதவி வகித்த ரணில் விக்ரமசிங்கவை அப்போதைய அதிபர் மைத்திரிபால சிறிசேன அப்பதவியில் இருந்து நீக்கியதற்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை மனித உரிமை மனுவை விசாரணை செய்ய உயர் நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

இது தொடர்பில் நீதிமன்றில் சாட்சியமளிக்குமாறு பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ள முன்னாள் அதிபர் மைத்திரிபால சிறிசேன, முன்னாள் பிரதமர் மகிந்த ராஜபக்ச உள்ளிட்டோருக்கு அழைப்பாணை வழங்கவும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளதாக குறிப்பிடப்படுகின்றது.

மனு தொடர்பான அடிப்படை உண்மைகளை பரிசீலித்த நீதிபதிகளான எஸ். துரைராஜா, குமுதுனி விக்கிரமாதித்தன் மற்றும் அச்சல வெங்கப்புலி ஆகிய மூவரடங்கிய உயர் நீதிமன்ற அமர்வு இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது.

அதன் பின்னர், குறித்த மனுவை எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 23ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ள நீதிமன்றம் தீர்மானித்ததுடன், இந்த மனுவை சமூக ஆர்வலர் ஒஷல ஹேரத் சமர்ப்பித்திருந்தார்.

2018ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 26ஆம் திகதி அப்போதைய அதிபர் மைத்திரிபால சிறிசேன விசேட வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டு, அப்போது பிரதமராக இருந்த ரணில் விக்ரமசிங்கவை பதவியில் இருந்து நீக்கியதாக மனுதாரர் கூறுகிறார்.

அதன் பின்னரே அந்த பதவிக்கு மகிந்த ராஜபக்ச நியமிக்கப்பட்டார் என்றும் மனுவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

19ஆவது திருத்தச் சட்டத்தின் பிரகாரம் நாடாளுமன்றத்தின் பெரும்பான்மை பலம் பிரதமருக்கு இருந்த போதிலும், முன்னாள் அதிபர் மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை பதவியில் இருந்து நீக்கி மகிந்த ராஜபக்சவை அந்த பதவிக்கு நியமித்தமை அரசியலமைப்பு சட்டத்திற்கு முரணானது என மனுதாரர் தெரிவித்துள்ளார்.

பிரதமரை பதவியில் இருந்து நீக்கும் அதிகாரம் அதிபருக்கு இல்லை எனவும், அப்போதைய அதிபர் மைத்திரிபால சிறிசேன, ரணில் விக்ரமசிங்கவை பதவியில் இருந்து நீக்கியதன் மூலம் அரசியலமைப்பின் அடிப்படை மனித உரிமைகளை மீறியுள்ளார் எனவும் கோரி இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இனவாதம் ஒழிக்கப்பட வேண்டும்! மனோ கணேசன் தெரிவிப்பு!



இலங்கையில் இனவாதம் ஒழிக்கப்பட வேண்டும் என தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் வலியுறுத்தியுள்ளார்.

அத்துடன், சிங்கள பௌத்த பெருந்தேசியவாதம் ஒழிக்கப்பட வேண்டும் எனவும் அவர் கூறியுள்ளார்.

இந்த நடவடிக்கையை முன்னெடுக்காது, தற்போதைய அரசாங்கத்துக்கு இலங்கையில் உள்ள தமிழ் முஸ்லீம் மக்கள் ஆதரவளிப்பார்கள் என நினைப்பது தவறு என இன்று நடைபெற்ற ஊடக சந்திப்பின் போது, மனோ கணேசன் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கையில் அண்மைக்காலங்களில் அதிகளவான கூட்டணிகள் அமைக்கப்பட்டு வருவதாக அவர் கூறியுள்ளார்.

இந்த ஆண்டில் அனைத்து தேர்தல்களும் நடைபெறுமென அதிபர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ள நிலையில், குறித்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், தேர்தல்களை மையமாக கொண்டு அமைக்கப்படும் எந்தவொரு கூட்டணியிலும் தமிழ் முற்போக்கு கூட்டணி இணையாது என மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

மேலும், அரசியல் கூட்டணிகளை அமைப்பதன் மூலம் ரணில் ராஜபக்சவுக்கு தமிழ் மக்களட உள்ளிட்ட சிங்கள மக்களின் ஆதரவு கிடைக்காது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

விளம்பர தொடர்புகளுக்கு +94 777 163990

# ஈகைப் போராளி முத்துக்குமாரின் 15 வது நினைவேந்தல்!
## தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி தலைமையகத்தில் இடம் பெற்றது!
### ஈழத் தமிழரைக் காக்குமாறுகோரி தமிழ்நாட்டில் தீக்குளித்து உயிர் துறந்த உறவுகள்!





அரச அங்கீகாரம் பெற்ற வடமாகாணத்தின் முதல்தர கனரக வாகனப் பயிற்சிப் பாடசாலை.




# கிருபா லேணர்ஸ்

# කිරුබා ලෑර්නර්ස් KIRUBAA LEARNERS

- குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் விரைவான சாரதி அனுமதிப்பத்திரம்.
- எழுத்துப்பரீட்சைக்கு விசேட வீதி ஒழுங்கு வகுப்புக்கள்
- அசோக் லேடன் பஸ் மூலமான கனரக வாகனப் பயிற்சி
- மும்மொழிகளிலும். உங்களுக்கு விரும்பிய நேரங்களிலும் வாகன பயிற்சிகள்.
- சகல கிளைகளிலும் பயிற்சி வகுப்புக்கள்.
- தவணைமுறையில் கட்டணங்கள்.
- இரவிலும் வாகனப் பயிற்சிகள்.




**தலைமையகம்**
226, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்
021 222 4353
0777 22 5292

| | | | |
|---|---|---|---|
| சுன்னாகம் 021 224 2022 | நெல்லியடி 021 226 0700 | பருத்தித்துறை 021 226 1100 | பூநகரி 021 320 1818 |
| ஆவரங்கால் 021 222 6688 | சித்தங்கேணி 021 225 2500 | சாவகச்சேரி 021 227 0700 | மன்னார் 023 225 1656 |
| முழங்காவில் 021 300 6544 | கிளிநொச்சி 021 228 5505 | விஸ்வமடு 021 320 1515 | வவுனியா 024 222 7777 |

# SMART TECH SOLUTION





உங்கள் வீடு, அலுவலகம் மற்றும் கம்பனிகளுக்கு CCTV கண்காணிப்பு கமரா சிறந்த முறையில் அமைத்துத்தரப்படும். சிறந்த வாடிக்கையாளர் சேவை அனுபவம் வாய்ந்த தொழில்நுட்பவியலாளர்கள் CCTV installation துறையில் 15 வருட அனுபவம் வாய்ந்த நிறுவனம்.

## Our Services:

CCTV sales & Installation / Alarm system
Door Lock /Finger Print Attendance /Electric Fence / Local Networking / Computer Repair & Maintenance / Software Development



CCTV பொருத்துனர்களுக்கும்
விற்பனையாளர்களுக்கும்
விசேட விலைக்கழிவு வழங்கப்படும்.

Contact us for More Information
+94 77 684 3023

+94 71684 3023 / +94 21221 3023
No: 282, Hospital Road, Jaffna.
www.smarttechsolution.lk

**தேசியம்** பத்திரிகையின் மின்னிதழைப் பெற இவ் வாட்ஸ் ஆஃப் குழுவில் இணைந்து கொள்ளுங்கள்.

Whatsapp +94 76 567 3339

No. 27, Kannathiddy Road,
Jaffna.Tel : 021 222 7557

SCAN ME